# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2023–ஆம் வருடம் மார்ச் மாதம் 21–ஆம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 18.03.2023

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்கெட் கடை எண். 13–ஐ திருமதி கவிதா என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். 30.06.2022 உடன் இரண்டாம் நிலை குத்தகை முடிவடைந்து மூன்றாம் நிலை உரிமம் புதுப்பித்தலுக்கு வாடகை நிலுவைத் தொகை செலுத்தாததாலும், சம்மதக் கடிதம் வழங்காததாலும் மேற்படி கடையை 06.10.2022 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. இக்கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2139/22/அ2)

**தீர்மானம் எண். 278**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23–இன்கீழ் மின் வாரிய குடியிருப்புப் பகுதியில் ரூ. 36.00 இலட்சத்திற்கு பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண். 149, நாள் 05.09.2022–இன்படி முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்படி, அரசாணை (நிலை) எண். 7, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.01.2023–இல் அம்ரூட் 2.0 (AMRUT 2.O) திட்டத்தின்கீழ் இராசிபுரம் நகராட்சி மின் வாரிய குடியிருப்புப் பகுதியில் ரூ. 36.00 இலசத்திற்கு பூங்கா மேம்பாட்டுப் பணிகள், மத்திய அரசு ரூ. 7.00 இலட்சம் மற்றும் மாநில அரசு ரூ. 11.00 இலட்சம், நகராட்சிப் பங்குத் தொகை ரூ. 18.00 இலட்சம்) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்க்காணும் அரசாணை, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(2924/22/இ1)

**தீர்மானம் எண். 279**

பதிவு செய்யப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022—23—இன்கீழ் புதியதாக வாரச்சந்தை அமைத்தல் பணிக்கு ரூ. 160.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொழில்நுட்ப அனுமதிக்காக நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. வாரச்சந்தை அமைக்கும் பணியில் Roof Truss-யை PAB Structure ஆக மாற்றம் செய்ய தலைமை பொறியாளர் அவர்கள் தெரிவித்ததன்படி, Structural Design அறிக்கை Coimbatore Institute of Technology, Coimbatore அவர்களிடம் பெறப்பட வேண்டியுள்ளது. மேற்க்காணும் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 60,000/— ஆகும். பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்க்கண்ட பணியின் அவரச அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1730/22/இ1)

**தீர்மானம் எண். 280**

அங்கீகரிக்கப்பட்டது.

(4) நாமக்கல் மாவட்டத்திற்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களது வருகையை முன்னிட்டு இராசிபுரம் நகராட்சியின் திட்டப்பணிகள் விவரங்களை தின மலர் நாளிதழில் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 16330.00 செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(195/22/இ1)

**தீர்மானம் எண். 281**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் வருவாய் நிதியின்கீழ் ரூ. 2.20 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலக கணினிகள் மற்றும் கணினி உபகரணங்கள், கண்காணிப்பு கேமராக்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு 14.12.2022—இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Spyder Technology, Salem - மதிப்பீட்டைவிட 0.18% குறைவு
2) Digi Print Services, Salem - மதிப்பீட்டைவிட 0.46% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.18% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Spyder Technology, Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Spyder Technology, Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். நகர் மன்ற தலைவரின் முன்

அனுமதி பெற்று Spyder Technology, Salem நிறுவனத்திற்கு பணியாணை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2699/22/இ1)**

**தீர்மானம் எண். 282**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**( 6 )** இராசிபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளின் விவரங்கள் தமிழ் முரசு, தினகரன் நாளிதழ்களின் சிறப்பு பொங்கல் மலர் **2023**-இல் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. **17155.00** செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

1. தமிழ் முரசு – ரூ. **8467.00**
2. தினகரன் – ரூ. **8688.00**

———————————

**மொத்தம் – ரூ. 17155.00**

———————————

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(195/23/இ1)**

**தீர்மானம் எண். 283**

அனுமதிக்கப்பட்டது.

**( 7 )** இராசிபுரம் நகராட்சியில் வருவாய் ஆய்வராக பணிபுரிந்த திருமதி ப. ராதா என்பவர் பவானி நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து பதவி உயர்வு வழங்கப்பட்டது தொடர்பாக திரு பி. தங்கதுரை என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். **14844/2017** சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு எம். ஷாஜகான் அவர்களால் நடத்தப்படுகிறது.

மேற்க்காணும் வழக்கிற்கான கட்டணம் ரூ. **20000/–**ஐ நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

வழக்கின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ. **20000/–** செலுத்தியதற்கு மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**(759/17/சி1)**

**தீர்மானம் எண். 284**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**( 8 )** இராசிபுரம் நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்த திரு க. பிரகாஷ் என்பவர் சேலம் மாநகராட்சியில் அயற் பணியில் (Deputation) **15.03.2017–**ஆம் தேதி முதல் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களது கடிதம் ந.க.எண். சி4/11441/2018, நாள் 03.02.2023–இல் திரு க. பிரகாஷ், சுகாதார ஆய்வாளரை சேலம் மாநகராட்சியில் ஒரு வழி பணியிடம் மாறுதலில் நிரந்தரமாக ஈர்த்துக் கொள்ள நகர் மன்ற தீர்மானம் நிறைவேற்றி வழங்க கோரப்பட்டுள்ளது.

அதன்படி, திரு க. பிரகாஷ், சுகாதார ஆய்வாளரை சேலம் மாநகராட்சியில் ஒரு வழி பணி மாறுதலில் நிரந்தரமாக ஈர்த்துக் கொள்ள நகர் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

திரு க. பிரகாஷ், சுகாதார ஆய்வாளரை சேலம் மாநகராட்சிக்கு நிரந்தரமாக ஈர்த்துக் கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(756/23/சி1)**

**தீர்மானம் எண். 285**

அனுமதிக்கப்பட்டது.

**( 9 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்கெட்டில் பொதுக்கழிப்பிடத்திலுள்ள கழிவுகள் கழிவு தொட்டியுடன் உள்ளதை பாதாள சாக்கடையுடன் இணைத்தல் மற்றும் அம்மா உணவகம் அரசு மருத்துவமனை கழிப்பிடத்தினை பாதாள சாக்கடையுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ள மதீப்பீட்டுத் தொகை ரூ. **3.00/–** இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வப்பெற்றுள்ளது.

*1)* திரு ஆர் பிரகாசம், ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி – மதிப்பீட்டைவிட **0.11** % குறைவு
*2)* திரு ஆர்.பெரியசாமி, ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி – மதிப்பீட்டைவிட 0.09% அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.11%** குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர் . பிரகாசம், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

**1)** மதிப்பீட்டைவிட 0.11 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியானை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4503/22/இ2)**

**தீர்மானம் எண். 286**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 வள்ளலார் கோவில் பின்புறம் கட்டனாச்சம்பட்டி, கோனோரிப்பட்டி பிளாக் 1–இல் ஏற்கனவே உள்ள கைப்பம்பை அகற்றிவிட்டு நீர் முழ்கி விசைப்பம்பு பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் வைத்து தண்ணீர் வசதி செய்யும் பணிகள் மேற்க்கொள்ள மதீப்பீட்டுத் தொகை ரூ. 1.50/– இலட்சத்திற்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

*1)* திரு ஆர். சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட **0.26** % அதிகம்
*2)* திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட **0.08**% குறைவு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மதிப்பீட்டைவிட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியானை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4577/22/இ2)

**தீர்மானம் எண். 287**

அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23 குப்புதாசன் தெருவில் நகராட்சிக்குச் சொந்தமான திறந்தவெளி கிணற்றினை சுத்தம் செய்து நீர்முழ்கி மின் மோட்டார் இறக்கி பொது மக்களுக்கு சின்டெக்ஸ் டேங்க் வைத்து தண்ணீர் வசதி செய்யும் பணிகள் மேற்க்கொள்ள மதீப்பீட்டுத் தொகை ரூ. 75000/–க்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வப்பெற்றுள்ளது.

1) திரு ஆர் சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.21 % அதிகம்
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.06 % குறைவு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.06 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மதிப்பீட்டைவிட 0.06 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியானை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4607/22/இ2)

**தீர்மானம் எண். 288**

அனுமதிக்கப்பட்டது.

(12) இராசிபுரம் நகராட்சி 2023–24–ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மற்றும் 2022–23–ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(160/23/பி1)

**தீர்மானம் எண். 289**

பதிவு செய்யப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சி அனைத்துப் பிரிவுகளுக்குத் தேவையான எழுதுபொருட்கள், பேப்பர்கள், நோட்டுகள், சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரிக்குத் தேவையான இரசீதுகள் வாங்கவும் 2023–ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 500000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

( 1072/23/பி1)

**தீர்மானம் எண். 290**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சி உதவியாளர், திரு க. சந்திரசேகரன் (தற்காலிக பணி நீக்கம்) என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு எண். 15602/2016, 14.02.2023 அன்று முடிக்கப்பட்டுள்ளதால், அதற்கான வழக்கு கட்டணம் ரூ. 20000/– வழங்க அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு டி. செழியன் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

வழக்கு கட்டணம் ரூ. 20000/– நகராட்சியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(210 /15/சி1)

**தீர்மானம் எண். 291**

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளிலுள்ள சாலைகளை புதுப்பிக்க Turip-22-23 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது. எனவே கீழ்க்கண்ட சாலைகளில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை.

1) அபிராமி கார்டன் கிராஸ் 1, 2, 3
2) செட்டியண்ணன் கிராஸ் 2, 3
3) திரு.வி.க தெரு
4) காந்தி நகர் கிராஸ் 7 (வார்டு 26)

மேற்க்கண்ட தெருக்களில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாத காரணத்தால் சாலை அமைக்கும் முன் இப்பணியை செய்வது மிகவும் அவசியமாகிறது. மேற்க்கண்டப் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதீப்பிடு ரூ. 15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்ற அனுமதி வழங்கலாம்.
2. மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடைத் திட்ட நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1032/23/இ2)

**தீர்மானம் எண். 292**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்திலுள்ள பயணியர் விடுதி மற்றும் வணிக வளாகம் ஆகிய கட்டடம் 1975–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மேற்க்கண்ட கட்டடம் 57x13மீ. என்ற அளவில் உள்ளது. இக்கட்டடம் கட்டப்பட்டு 48 வருடங்களான நிலையில் கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்துவது அவசியமாகிறது. எனவே இக்கட்டடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிக்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1039/23/இ1)**

**தீர்மானம் எண். 293**

அனுமதிக்கப்பட்டது.

( 17 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பாராதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி பள்ளியின் கட்டடம் தற்போது மிக மோசமான நிலையில் உள்ளது. இந்தக் கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்துவது அவசியமாகிறது. எனவே பள்ளியின் கிழக்குப் பகுதியில் வடக்கில் அமைந்துள்ள ஓட்டு கட்டடம் தற்போது 19.55 x 6.20 மீ. என்ற அளவில் அமைந்துள்ள இக்கட்டடம் 1956–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே மேற்க்கண்ட கட்டடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1038/23/இ1)**

**தீர்மானம் எண். 294**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பாராதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி பள்ளியின் கட்டடம் தற்போது மிக மோசமான நிலையில் உள்ளது. இந்தக் கட்டடத்தை குழந்தைகள் பாதுகாப்பு கருதி இடித்து அப்புறப்படுத்துவது அவசியமாகிறது. எனவே பள்ளியின் கிழக்குப் பகுதியில் தெற்கில் அமைந்துள்ள RCC கட்டடம் தற்போது 6.65x14.69 மீ. என்ற அளவில் அமைந்துள்ளது. இந்த கட்டடம் 1974–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே மேற்க்கண்ட கட்டடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1037/23/இ1)**

**தீர்மானம் எண். 295**

அனுமதிக்கப்பட்டது.

( 19 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான வி. நகர் பகுதியில் வார்டு எண்.9-இல் அமைந்துள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இந்தக் கட்டடம் 5.5x13.2 மீ. என்ற அளவில் கட்டப்பட்டுள்ளது. மேற்க்கண்ட கட்டட கட்டப்பட்டு பல வருடங்கள் ஆகியுள்ளது. எனவே, மேற்க்கண்ட கட்டடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிக்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1036/23/இ1)**

**தீர்மானம் எண். 296**

அனுமதிக்கப்பட்டது.

( 20 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான அண்ணாநகர் சாலையில் அமைந்துள்ள பள்ளியில் உள்ள ஓட்டுக் கட்டடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்க்கண்ட கட்டடம் கட்டப்பட்டு பல வருடங்களான நிலையில் மேற்க்கண்ட கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்துவது அவசியமாகிறது. இந்தக் கட்டடம் 7x12 மீ. என்ற அளவில் கட்டப்பட்டுள்ளது . எனவே, மேற்க்கண்ட கட்டடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1034/23/இ1)**

**தீர்மானம் எண். 297**

அனுமதிக்கப்பட்டது.

( 21 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான வி.நகர் பகுதியில் அமைந்துள்ள பள்ளிக்கூடத்தில் உள்ள ஓட்டுக் கட்டடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இந்தக் கட்டிடம் **1950–** ஆம் ஆண்டு 12x6 மீ. என்ற அளவில் கட்டப்பட்டுள்ளது. மேற்க்கண்ட பள்ளியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு கருதி இடித்து அப்புறப்படுத்துவது அவசியமாகிறது. எனவே மேற்க்கண்ட கட்டடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1035/23/இ1)**

**தீர்மானம் எண். 298**

அனுமதிக்கப்பட்டது.

( 22 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளிலுள்ள சாலைகளை புதுப்பிக்க Turip-22-23 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது. எனவே, கீழ்க்கண்ட சாலைகளில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை.

1) பொம்மி தெரு
2) காமாட்சியம்மன் கோவில் தெரு
3) லிங்கப்பா தெரு
4) கர்ணம் சந்து மற்றும் கிராம முனிசிப் சந்து
5) ராம் நகர் கிராஸ் – 5

மேற்க்கண்ட தெருக்களில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாத காரணத்தால் சாலை அமைக்கும் முன் இப்பணியை செய்வது மிகவும் அவசியமாகிறது. மேற்க்கண்டப் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதீப்பிடு ரூ. 13.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்ற அனுமதி வழங்கலாம்.
2. மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடைத் திட்ட நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1033/23//இ2)

**தீர்மானம் எண். 299**

அனுமதிக்கப்பட்டது.

( 23 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் 13 வார்டுகளில் உள்ள தெரு விளக்கு பராமரிப்பு செய்ய 16.02.23 முடிய அனுமதி முடிவடைவதால் தற்போது இந்நகராட்சியிலுள்ள அனைத்து தெரு விளக்குகளும் LED விளக்குகளாக மாற்றம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளதால் ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளை 13 வார்டுகளில் பராமரிப்பு செய்து வந்த ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் அவர்களுக்கு அதே விலை விகிதத்தில் மேலும் இரண்டு மாத காலத்திற்கு மட்டும் கால நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் 13 வார்டுகளில் உள்ள தெரு விளக்கு பராமரிப்பு செய்ய 16.02.23 முடிய அனுமதி முடிவடைவதால் ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் அவர்களுக்கு அதே விலை விகிதத்தில் மேலும் இரண்டு மாத காலத்திற்கு மட்டும் கால நீட்டிப்பு செய்து வழங்க நகர் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/19/இ2)

**தீர்மானம் எண். 300**

அனுமதிக்கப்பட்டது.

( 24 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் குழாய்களில் உள்ள வால்வுகள் தற்போது புதியதாக மாற்ற பணியாணை வழங்கப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. இதில் தற்போது வால்வு தொட்டி கட்டுவது அவசியமாகிறது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

1). V.O.C Nagar OHT –9LL Inner Tank Delivery Valve
2) V.O.C Nagar OHT –9LL Outer Tank Delivery Valve
3) V.Nagar Road No 11 Near Periyasamy Tea Stall

4). Near Aravindh Hospital
5) OLd Bus Stand 350 mm Delivery Valve
6) V.Nagar Road No 4   Near Church Compound
7) Gandhi Salai Near PSK Mahal
8) V.Nagar Road No 7
9)  Sivan Kovil Street - Police Line Back Side
10) V.O.C Nagar 5LL Delivery Valve
11) V.O.C Nagar OHT –9LL Delivery Valve North Colony Supply Valve
12) V.O.C Nagar OHT – Near Centre valve

மேற்க்கண்ட வால்வுகளுக்கு வால்வு தொட்டி கட்டவும் மற்றும் V.O.C Nagar OHT paver Block பதித்ததில் Side Concrete அமைக்கும் பணி ஆகியவற்றிற்கு தயாரிக்கப்பட்ட மதீப்பீடு ரூ. **3.80** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2.** மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1031/23/இ2)**

**தீர்மானம் எண். 301**

அனுமதிக்கப்பட்டது.

**( 25 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வி. நகர் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் குழாய் வால்வுகள் பழுதடைந்து குடிநீர் வினாகிறது. எனவே, மேற்க்கண்ட வால்வுகளை புதிதாக மாற்றுவது அவசியமாகிறது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

**1) 250** mm. சுலீஸ் வால்வு – வி. நகர் ரோடு நெ. **1**
**2) 200** mm. சுலீஸ் வால்வு – வி. நகர் ரோடு நெ. **4**
**3) 200** mm. சுலீஸ் வால்வு – புதிய பேருந்து நிலையம்

மேற்க்கண்ட வால்வுகளை மாற்றும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதீப்பிடு ரூ. **3.30** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

**1.** குடிநீர் விநியோகத்திற்கு மேற்க்கண்ட வால்வுகளின் நீர்கசிவுகளை சரி செய்ய வேண்டியுள்ளதால் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**2.** மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1030/23/இ2)**

**தீர்மானம் எண். 302**

அனுமதிக்கப்பட்டது.

( 26 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட (குட்டான்குட்டை கிழக்கு பகுதி) நைனாமலை லே அவுட், காலனி தெரு 1, 2 மற்றும் காந்தி நகர் பகுதிகளில் புதியதாக பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் Manhole அமைக்கும் பணிகளுக்காக ரூ. 13.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு ஆர். பிரகாசம், மசக்காளிப்பட்டி – 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு.
2. திரு ஆர். பெரியசாமி, மசக்காளிப்பட்டி – 0.59% மதிப்பீட்டைவிட அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர். பிரகாசம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியானை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(424/23/இ2)

**தீர்மானம் எண். 303**

அனுமதிக்கப்பட்டது.

( 27 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட இராமசாமி தோட்டம் கிழக்கு, இராமசாமி தோட்டம் கிராஸ் 2, 3, 4 பகுதிகளில் புதியதாக பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் Manhole அமைக்கும் பணிகளுக்காக ரூ. 13.50 இலட்சத்திற்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு ஆர். பிரகாசம், மசக்காளிப்பட்டி – 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு.
2. திரு ஆர். பெரியசாமி, மசக்காளிப்பட்டி – 0.61% மதிப்பீட்டைவிட அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு ஆர். பிரகாசம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தவைரின் முன் அனுமதி பெற்று பணியானை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்க்கண்டப் பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(423/23/இ2)

**தீர்மானம் எண். 304**

அனுமதிக்கப்பட்டது.

( 28 ) இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டுக் குத்தகை இனங்களில் பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு 15.03.2023–ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில்

ஒப்பந்தப்புள்ளியில் கோர ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டனர் விவரம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1) | திருமதி செ. நீலாம்பாள், க/பெ. செல்வராஜ்,<br>13, பழனி சந்து, இராசிபுரம். | ரூ. 80000/— |
| 2) | திரு கே. ரவிச்சந்திரன், த/பெ. கந்தசாமி,<br>14/44, பழனி சந்து, இராசிபுரம். | ரூ. 79900/— |

**அலுவலகக்குறிப்பு :**

பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ. 80000/— என திருமதி செ. நீலாம்பாள் என்பவர் கோரியுள்ளார். கடந்த கால ஆண்டைவிட கூடுதலாக உள்ளதால் உச்ச கேள்வித் தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(1758/18/அ2)

**தீர்மானம் எண். 305**

கடந்தாண்டைவிட அதிகமாக கோரியுள்ள திருமதி செ. நீலாம்பாள் அவர்களது ஏலத்தினை உறுதி செய்யலாம்.

( 29 ) நகராட்சிக்குட்பட்ட இடத்தில் இயங்கி வரும் உழவர் சந்தைக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 19047/ஆர்2/2019 நாள் 30.01.2023—இல் வருட வாடகையாக ரூ. 15000/— வசூலிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் .

(5789/99/அ2)

**தீர்மானம் எண். 306**

பதிவு செய்யப்பட்டது.

( 30 ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 8880/2022/பி1 நாள் 13.02.2023—இல், நமக்கு நாமே திட்டம் 2022—23—இன்கீழ் இராசிபுரம் நகராட்சியில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள பொதுமக்கள் பங்களிப்பு தொயைாக, இராசி ரோட்டரி பவுண்டேசன் ட்ரஸ்ட் அவர்களால் ரூ. 3.00 இலட்சம் (வரைவோலை எண். 037550 நாள் 31.12.2022, பெடரல் வங்கி, இராசிபுரம்) இந்நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்காணும் பணிகளை நமக்கு நாமே திட்டம் 2022—23—இன்கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | திட்ட மான்யம் (ரூ. இலட்சத்தில்) | பொது மக்கள் பங்குத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சி.பி.கண்ணையா தெரு மற்றும் டி.வி.எஸ். தெருவில் வடிகாலுக்கு இரும்பு கிரில் பொருத்துதல் | 4.50 | 3.00 | 1.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திடக்கழிவு மேலாண்மை பணிகளை கண்காணிக்க 40 சிசிடிவி கேமிராக்கள் வாங்கி பொருத்துதல் | 4.50 | 3.00 | 1.50 |
| | **மொத்தம்** | **9.00** | **6.00** | **3.00** |

**அலுவலகக்குறிப்பு :**

நமக்கு நாமே திட்டம் **2022–23**–இன்கீழ் மேற்க்காணும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(1842/22/இ1)**

**தீர்மானம் எண். 307**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

( 31 ) இராசிபுரம் நகராட்சி சின்ன அக்ரஹாரம் பேவர் பிளாக் சாலையை TURIP 2022-23 திட்டத்தின்கீழ் கான்கிரீட் சாலையாக அமைக்க உள்ளதால் அச்சாலையில் பழுதடைந்த பேவர் பிளாக் கற்களை அகற்றிவிட்டு நல்ல நிலையிலுள்ள பேவர் பிளாக் கற்களை வ.உ.சி. நகரில் உள்ள **9.00** இலட்சம் மற்றும் **7.50** இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டிகளின் அடிப்பகுதியில் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. **1.20** இலட்சம் ஆகும். மேற்க்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது. இப்பணியின் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) இப்பணியின் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(624/22/இ1)**

**தீர்மானம் எண். 308**

அனுமதிக்கப்பட்டது.

**( 32 )** பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **2022–23**-இல் திரு ஏ.கே.பி. சின்ராஜ், நாமக்கல் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் அவர்கள் இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **2–** இல் **60000** லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 17.70 இலட்சத்திற்கு பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பணி செய்ய இந்நகராட்சியில் தல ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் **40** குடியிருப்புகள் இரயில்வே பாதைக்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ளதால் இதுவரை அப்பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை. எனவே அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க மேல்நிலைத்தொட்டி அமைக்கும் பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் . **(719/23/இ1)**

**தீர்மானம் எண். 309**

ஒத்தி வைக்கப்பட்டது.

( 33 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 11, வி. நகர் ரோடு எண். 10–இல் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான மயானத்தின் பாதுகாப்பிற்காக நுழைவு வாயில் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 30000/– ஆகும். மேற்படி பணியினை ஒப்படைப்பு பணியாக திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்ததாரருக்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(113/23/இ1)**

**தீர்மானம் எண். 310**

அனுமதிக்கப்பட்டது.

( 34 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளுக்கு தற்போது 6 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சிக்கு 30 கீ.மீ. தூரத்திலிருந்து Pumping மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்க்கண்ட Pumping 30 கீ.மீ. தூரத்தில் இருப்பதால் நகராட்சிக்கு வரும் குடிநீர் அளவு குறைகிறது. எனவே இந்த அளவை சரிசெய்ய பழைய பேருந்து நிலையத்திலுள்ள OHT அருகில் ஒரு தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி கட்டி அதிலிருந்து Pumping செய்து 5 OHT-க்கு அனுப்புவது அவசியமாகிறது. நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் இடைவெளியின்றி தினசரி குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளை அளவீடு செய்து சீரான குடிநீர் விநியோகம் செய்யவும், Master Sump கட்ட Design தயாரிக்கவும், மேற்க்கண்டப் பணிகளுக்கு DPR தயாரிப்பது அவசியமாகிறது. மேற்க்கண்டப் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.15 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1 . மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்க்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/1076/23)**

**தீர்மானம் எண். 311**

அனுமதிக்கப்பட்டது.

( 35 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, 23எ ஆகிய இரண்டு வார்டுகளில் சந்துவீரி தெரு, வைத்தியலிங்கம் தெரு, காமாட்சியம்மன் கோவில் தெரு ஆகிய இடங்களில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் சின்டெக்ஸ் டேங்க்கை அப்புறப்படுத்திவிட்டு உப்பு தண்ணீர் குழாய் அமைத்துத் தருமாறு நகர மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியதன்பேரில் மேற்க்கண்ட சின்டெக்ஸ் டேங்க்கை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(671/23/இ2)**

**தீர்மானம் எண். 312**

அனுமதிக்கப்பட்டது.

**( 36 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு **11** மற்றும் **25** வெங்கிடுசாமி தெரு, கோனோரிப்பட்டி எக்ஸ்டென்சன் நெ.**1** பகுதிகளில் கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டு வருவதால் அப்பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தண்ணீர் இல்லாமல் வறண்ட நிலையிலுள்ள ஆழ்துளைக்கிணறு கைப்பம்பை அகற்ற கோரியுள்ளார்கள். எனவே மேற்க்கண்ட இடத்திலுள்ள கைப்பம்பை அகற்ற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1522/22/இ2)**

**தீர்மானம் எண். 313**

அனுமதிக்கப்பட்டது.

**( 37 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **26** செல்லப்பா காட்டுக்கொட்டாய் பகுதிக்கு ராம்நகர் பொது கிணற்றிலிருந்து உப்பு தண்ணீர் வசதி செய்து தரக்கோரி **26–**ஆவது வார்டு நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். எனவே உப்பு தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதீப்பீடு ரூ. **2.80** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1 . மன்றம் அனுமதிக்கலாம்.

2 . மேற்கண்டப் பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1218/23/இ2)**

**தீர்மானம் எண். 314**

அனுமதிக்கப்பட்டது.

**( 38 )** இராசிபுரம் நகராட்சியில் பணியாற்றும் சீருடை பணியாளர்களுக்கு **2022–**ஆம் ஆண்டுக்கான சீருடைகள் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேசனில் ரூ. **70408/–**க்கு பெற்று வழங்கப்பட்டது. மேலும் இவர்களுக்கான தையல் கூலி ரூ. **33680/–** வழங்க வேண்டியுள்ளது. சீருடைகள் வழங்கியதற்கும் அதற்கான தையல் கூலி வழங்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(4469/22/எச்1)**

**தீர்மானம் எண். 315**

அனுமதிக்கப்பட்டது.

( 39 ) இராசிபுரம் நகராட்சியில் கழிவுநீர் கால்வாய் மீது ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் கட்டைகளை உடைக்கும் இயந்திரம் – 1, சம்மட்டி – 2 மற்றும் திடக்கழிவுகளை எடை போடுவதற்கு எடை இயந்திரம் – 3 ஆகியவைகளை வாங்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

1) அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாய்க்கன்பட்டி ரூ. 78400/–
2) காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் ரூ. 75900/–

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1014/23/எச்1)

**தீர்மானம் எண். 316**

அனுமதிக்கப்பட்டது.

( 40 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனம் TN 28 AS 0111-இன் பழுதினை நிவர்த்தி செய்து கொடுக்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

1) மாருதி கார் கிளினிக், இராசிபுரம் ரூ. 85000/–
2) விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் ரூ. 79300/–

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(4473/23/எச்1)

**தீர்மானம் எண். 317**

அனுமதிக்கப்பட்டது.

( 41 ) இராசிபுரம் நகராட்சி தட்டான்குட்டை சாலையிலுள்ள நுண் உரக்கிடங்கின் முன்பக்க நுழைவு வாயில் சேதமடைந்து விட்டதனை சரிசெய்ய நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பவர் அன்ட் கன்ரோல், இராசிபுரம் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

1) ஞானவேல் டிசைன் வெல்டிங் ஒர்க்ஸ், இராசிபுரம் ரூ. 42786/–
2) பவர் அன்ட் கன்ரோல், இராசிபுரம் ரூ. 40828/–

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1012/23/எச்1)

**தீர்மானம் எண். 318**

அனுமதிக்கப்பட்டது.

( 42 ) இராசிபுரம் நகராட்சி நுண்உரக்கிடங்கிலுள்ள மக்கும் கழிவுகளை அரைக்கும் இயந்திரத்தில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.பி.பவர் அன்ட் கன்ட்ரோல், இராசிபுரம் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.பி.பவர் அன்ட் கன்ட்ரோல், இராசிபுரம் | ரூ. 21358/– |
| 2. | ஞானவேல் டிசைன் ஒர்க்ஸ், இராசிபுரம் | ரூ. 22538/– |

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1015/23/எச்1)

**தீர்மானம் எண். 319**

அனுமதிக்கப்பட்டது.

( 43 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஆட்டோக்கள் TN 28 BW 9706, TN 28 BW 9274-இன் மின்கலன்கள் அதன் பயன்பாட்டுக் காலம் முடிந்து பழுதாகிவிட்டதால் அதனை மாற்ற நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கோபால் ஆட்டோ எலக்ரிக்கல் ஒர்க்ஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | கோபால் ஆட்டோ எலக்ரிக்கல் ஒர்க்ஸ், இராசிபுரம் | ரூ. 8000/– |
| 2. | தி பேட்டரி கேர், இராசிபுரம் | ரூ. 8150/– |

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1013/23/எச்1)

**தீர்மானம் எண். 320**

அனுமதிக்கப்பட்டது.

(44) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனம் TN 28 BW 9646- இ ன் பழுதினை நிவர்த்தி செய்து கொடுக்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

1. மாருதி கார் கிளினிக், இராசிபுரம் ரூ. 2500/–
2. விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் ரூ. 1810/–

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(4470/22/எச்1)**

**தீர்மானம் எண். 321**

அனுமதிக்கப்பட்டது.

(45) நகராட்சிகள் நிருவாக இயக்குநர், சென்னை அவர்களது அலுவலக கடிதத்தில் இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் சேகரமாகும் மக்கும் கழிவுகளிலிருந்து உரம் தயாரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் அரசு வேளாண்மை துறையில் உரிமம் பெறவும், தயாரிக்கப்படும் உரத்தின் தரத்தினை ஆய்வு செய்யவும் மற்றும் **செழிப்பு** என்ற பெயரில் விற்பனை செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இதற்கான உரிமக்கட்டணம், ஆய்வுக் கட்டணம் மற்றும் உரத்தினை விற்பனை செய்வதற்கு பைகள் வாங்குதல் போன்றவற்றுக்கான உத்தேச செலவினம் ரூ. **50000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1016/23/எச்1)**

**தீர்மானம் எண். 322**

அனுமதிக்கப்பட்டது.

(46) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் லாரி TN 28 AS 0104, TN 28 AS 01111-இன் மின்கலன்கள் அதன் பயன்பாட்டுக் காலம் முடிந்து பழுதாகிவிட்டதால் அதனை மாற்ற நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கோபால் ஆட்டோ எலக்ரிக்கல் ஒர்க்ஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

1. கோபால் ஆட்டோ எலக்ரிக்கல் ஒர்க்ஸ், இராசிபுரம் ரூ. 14000/–
2. தி பேட்டரி கேர், இராசிபுரம் ரூ. 14400/–

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1073/23/எச்1)

**தீர்மானம் எண். 323**

அனுமதிக்கப்பட்டது.

( 47 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனம் TN 28 BW 9242-இன் பழுதினை நிவர்த்தி செய்து கொடுக்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | மாருதி கார் கிளினிக், இராசிபுரம் | ரூ. 10500/– |
| 2. | விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் | ரூ. 9650/– |

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(4469/22/எச்1)

**தீர்மானம் எண். 324**

அனுமதிக்கப்பட்டது.

( 48 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனம் TN 28 BW 9248-இன் பழுதினை நிவர்த்தி செய்து கொடுக்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | மாருதி கார் கிளினிக், இராசிபுரம் | ரூ. 23200/– |
| 2. | விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் | ரூ. 19400/– |

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (4472/22/எச்1)

**தீர்மானம் எண். 325**

அனுமதிக்கப்பட்டது.

( 49 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனம் TN 28 BW9243-இன் பழுதினை நிவர்த்தி செய்து கொடுக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில்

கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | மாருதி கார் கிளினிக், இராசிபுரம் | ரூ. 2900/– |
| 2. | விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், இராசிபுரம் | ரூ. 2200/– |

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(4467/22/எச்1)**

**தீர்மானம் எண். 326**

அனுமதிக்கப்பட்டது.

**( 50 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் லாரி TN 28 AS 0111-இன் முன்பக்க டயர்கள் இரண்டும் தேய்ந்து விட்டதால் அதனை மாற்ற நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அதிசிந்தா ரப்பர்ஸ், இராசிபுரம் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பிரிட்ஜ் ஸ்டோன் டயர் வோர்ல்ட், இராசிபுரம் | ரூ. 21000/– |
| 2. | அதிசிந்தா ரப்பர்ஸ், இராசிபுரம் | ரூ. 20600/– |

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1073/22/எச்1)**

**தீர்மானம் எண். 327**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.